# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாள், வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## <u>நிகழ்ச்சி நிரல்</u>

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பணிவிதிகள் 01.10.1996 முதல் அமுல்படுத்தப்பட்டதனை அடுத்து அரசு தனது ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.05.1998ல் நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் நிலைகளில் கீழ்கண்ட விவரப்படியான பணியிடங்களை இம்மாநகராட்சிக்கு அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

1. நிர்வாக அலுவலர் – 04 பணியிடங்கள்.
2. கணக்கு அலுவலர் – 02 பணியிடங்கள்.

நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடங்கள் வகுப்பு –IIஐ சார்ந்த பணியிடங்கள் ஆகும். தவிர கோயமுத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 106 (பி)ன் படி (திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கும் பொருந்துவதாகும்) வகுப்பு –II நிலையிலான பணியிடங்கள் யாவும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று நியமனம் செய்தல் வேண்டும் எனவும், அவ்வாறான நியமனத்திற்கு அரசின் உரிய உறுதியாக்க ஆணையினை பெறுதல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2014–2015, 2017 –2018ம் ஆண்டில் கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் பணியிடங்களில் 04 பணியிடங்கள் காலி ஏற்பட்டது. விவரம் பின்வருமாறு

| வ. எண் | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | காலிப் பணியிட விவரம் | காலி ஏற்பட்ட ஆண்டு விவரம் |
|---|---|---|---|
| 01 | செல்வி.மு.சந்திரா, நிர்வாக அலுவலர் | வயது முதிர்வு காரணமாக 30.06.2014 ல் ஒய்வு பெற்று விட்டார் (இப்பணியிடமானது நீதிமன்ற தீர்ப்புரையின் படி நடவடிக்கை மேற்கொள்வதாகும்) | 2014–2015 |
| 02 | எம்.எஸ்.மும்தாஜ், நிர்வாக அலுவலர் | வயது முதிர்வு காரணமாக 28.02.2018 அன்று ஓய்வு பெற்று விட்டார். | 2017–2018 |
| 03 | சி.சிராஜீதீன், கணக்கு அலுவலர் | வயது முதிர்வு காரணமாக 28.02.2018 அன்று ஓய்வு பெற்று விட்டார். | |
| 04 | எஸ்.ரெங்கநாதன், நிர்வாக அலுவலர் | வயது முதிர்வு காரணமாக 31.03.2018 அன்று ஓய்வு பெற்று விட்டார். | |

மேற்கண்ட 2014–2015 மற்றும் 2017 –2018ம் ஆண்டில் ஏற்பட்டுள்ள 04 காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொண்ட சமயம் கீழ்கண்ட பணியாளர்கள் கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் நிலையில் பதவி உயர்வுக்கான பணி மூப்பில் இருந்து வந்தனர்.

1. திருமதி. அ. ரசீதா பேகம், கண்காணிப்பாளர்,
2. திருமதி. கே.வி. ரமணி, கண்காணிப்பாளர்,
3. திரு. ஆர். சதீஸ்குமார், உதவி வருவாய் அலுவலர்,
4. திரு. என். ராஜமாணிக்கம், உதவி வருவாய் அலுவலர்,

5. திரு. ஆர். ரமேஷ்குமார், கண்காணிப்பாளர்,
6. திருமதி. எஸ். மீனாட்சி, கண்காணிப்பாளர்,

இதில் வ.எண்.1,2,3ல் இடம் பெற்றுள்ள மூவரும் பணியில் மூத்தவர்களாக உள்ள போதும் பணியில் குறைபாடு காரணமாக ஒழுங்கு நடவடிக்கை விதி 8(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கோப்பு நடவடிக்கையிலும் மற்றும் தண்டனைகள் வழங்கப்பட்டும் இருந்ததால் இவர்களை பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யப்படவில்லை.

எனவே, இவர்களுக்கு அடுத்த படியாக பணி மூப்பில் தகுதியாக காத்திருப்பு பட்டியலில் இருந்த திரு.என்.ராஜமாணிக்கம் மற்றும் திரு.ஆர்.ரமேஷ்குமார், ஆகிய இருவர் மட்டும் பணிவிதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளை முடித்தும், பணியில் குறைபாடு ஏதுமின்றி இருந்தனர். வ.எண்.6ல் தெரிவிக்கப்பட்டுள்ள திருமதி.எஸ்.மீனாட்சி, என்பவர் பணியில் இளையவராகவும், பணிவிதிகளில் வரையறுக்கப்பட்ட தகுதிகளை முடிக்காமல் இருந்ததால் இவரை நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கு பரிசீலனை செய்யப்படவில்லை .

எனவே, பணிமூப்பின்படி தகுதியாக இருந்த திரு.என்.ராஜமாணிக்கம் மற்றும் திரு.ஆர்.ரமேஷ்குமார், ஆகிய இருவரை நிர்வாக அலுவலர்களாக பதவி உயர்வு செய்யப்பட்டது. பதவி உயர்வு செய்யப்பட்ட அப்பணியிடத்தில் 23.07.2018 அன்று பதவியில் சேர்ந்த விவரத்தினை தெரிவித்தும், பதவி உயர்வு செய்யப்பட்டமைக்கான உறுதியாக்க ஆணை வழங்கிட கோரி அரசுக்கு இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு ஆணை எதிர் நோக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் 2017 –2018ம் ஆண்டில் காலி ஏற்பட்டு பூர்த்தி செய்யப்படாமல் மீதம் உள்ள 02 காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்ய இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.2002/2018 சி1(மையம்) நாள்.07.06.2019 வாயிலாக வெளியிடப்பட்ட 2019–2020ம் ஆண்டிற்கான காலிப்பணியிட அறிக்கையின்படி இன்றைய நாளில் கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் நிலையில் பணிபுரிந்து வரும் கீழ்கண்ட பணியாளர்கள் அடங்கிய முதுநிலைப் பட்டியல் (Seniority List) வெளியிடப்பட்டது. மேற்கண்ட செயல்முறையில் முதுநிலைப் பட்டியல் தொடர்பாக ஆட்சேபணைகள் மற்றும் அபிப்ராயம் ஏதும் இருப்பின் அதனை எழுத்து மூலமாக இவ்வாணை வெளியிடப்பட்டு பெறப்பட்ட நாள் முதல் 07 தினங்களுக்குள் தெரிவித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

1. திருமதி.அ.ரசீதா பேகம், கண்காணிப்பாளர்,
2. திருமதி.கே.வி.ரமணி, கண்காணிப்பாளர்,
3. திரு.ஆர். சதீஸ்குமார், உதவி வருவாய் அலுவலர்,
4. திருமதி.எஸ்.மீனாட்சி, கண்காணிப்பாளர்,
5. திருமதி.ஆர்.புவனேஸ்வரி, கண்காணிப்பாளர்,
6. திருமதி.எஸ்.வசந்தி, கண்காணிப்பாளர்,
7. திரு.பி.சிவசங்கர், உதவி வருவாய் அலுவலர்,
8. திரு.எஸ்.துரை, உதவி வருவாய் அலுவலர்,

இத்தற்காலிகப் பணித்தேர்ச்சிப் பெயர் பட்டியல் தொடர்பாக இன்றைய நாள் வரை தற்காலிக பணித் தேர்ச்சிப் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள மற்றும் வேறு பணியாளர்களிடமிருந்து எந்தவித அபிப்ராயம் மற்றும் ஆட்சேபணைகளும் பெறப்படவில்லை.

மேற்கண்ட பட்டியலில் வ.எண்.1, 2ல் இடம் பெற்றுள்ள இருவரும் பணியில் மூத்தவர்களாக உள்ள போதும் பணியில் குறைபாடு காரணமாக ஒழுங்கு நடவடிக்கை விதி 8(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கோப்பு நடவடிக்கையிலும், தண்டனை நடப்பில் உள்ள நிலையில் (Currency of Punishment) பதவி உயர்வுக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலாது என்பதால் இவர்களை பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யப்படவில்லை.

வ.எண்.03ல் கண்டுள்ள திரு.ஆர். சதீஸ்குமார், உதவி வருவாய் அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் (பொறுப்பு) என்பவர் பொன்மலைக் கோட்ட அலுவலகத்திற்கு உட்பட்ட

பகுதிகளில் உள்ள வணிக ரீதியான கட்டுமானத்திற்கு குடியிருப்பு கட்டிடமாக வரிவிதிப்பு செய்தும், தவிர கட்டிடப்பரப்பளவினை குறைத்து வரிவிதிப்பு செய்யப்பட்டதன் காரணமாக மேற்படி அலுவலர் மீது திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதிகள் விதி 8(2) ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் ஏற்படுத்தப்பட்டு இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆனதால் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2501/2015/சி3(மையம்), நாள்.27.03.2017ன் வாயிலாக இவருக்கு அடுத்து வரும் ஊதிய உயர்வினை ஆறு மாத காலத்திற்கு திரண்ட பயனின்றி (Six Month - Without Cumulative Effect) நிறுத்தி வைத்து தண்டனை வழங்கி ஆணையிடப்பட்டது.

மேற்படி தண்டனையானது 31.03.2019ல் முடிவடைந்து விட்டது. இதன்படி திரு. ஆர். சதீஸ்குமார், உதவி வருவாய் அலுவலர் என்பவருக்கு 2017–2018 மற்றும் 2018–2019 ம் ஆண்டு பணிமூப்புப் பட்டியலில் இவரது பெயரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், மேற்கண்ட பணியாளருக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறையின் பிரிவு அலுவலர் திரு.உமாபதி, அவர்களை தொலைபேசி மூலம் விவரம் கோரப்பட்டதில் அரசாணை(நிலை) எண்.22, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்.24.02.2014 பத்தி எண். (1 – i)ல் பணியில் குறைபாடு காரணமாக ஒரு குற்றச்சாட்டிற்கு வழங்கப்பட்ட தண்டனைக்காலம் முடிவடையும் வரை உள்ள நிகழ்வானது ஒரு ஆண்டு பணித்தேர்ச்சிப் பணி மூப்புப் பட்டியலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்றும், அதே தண்டனை முடிவடைந்த நிகழ்வினை மேற்கோள்காட்டி அடுத்த பணி மூப்பு பட்டியலினை பரிசீலனை செய்யாமல் இருத்தல் கூடாது என மேற்படி அரசாணையில் உள்ளது எனவும், அதனை கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், இது தொடர்பாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களிடம் தெளிவுரை கோரப்பட்டது. அதன்படி பெறப்பட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித ஓ.மு.எண்.594/த1/2019, நாள்.08.07.2019ந் தேதிய தெளிவுரைக் கடிதத்தில் உதவி வருவாய் அலுவலராகப் பணிபுரிந்து வரும் திரு.ஆர். சதீஸ்குமார் என்பவருக்கு மாநகராட்சி முதுநிலைப்படி நிர்வாக அலுவலர் பதவி உயர்வுக்கு உரிய அனைத்து தகுதி இருப்பின் அதன் அடிப்படையிலும், அன்னார் மீது கோப்புகளின் படி 8(2)ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை மற்றும் வழங்கப்பட்ட தண்டனை நடப்பில் இல்லாத நிலையில் (Currency of Punishment) பதவி உயர்வு வழங்க நிர்வாக ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே திரு.ஆர்.சதீஸ்குமார், என்பவரின் பெயரை 01.04.2019 அன்று எடுத்துக் கொள்ள தகுதி உடையவராக உள்ளார்.

வரிசை எண்.04ல் இடம் பெற்றுள்ள திருமதி. சி.மீனாட்சி கண்காணிப்பாளர் என்பவர் மாநகராட்சிப் பணிவிதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு கண்காணிப்பாளர் நிலையிலான பணியிடத்தில் 02 ஆண்டுகள் முழுமையாக பணி முடித்துள்ளார். மேலும், இவர் மீது கடந்த 05 ஆண்டுகளில் எவ்வித குற்றச்சாட்டுக் கோப்புகளும் நாளது தேதி வரை நிலுவையில் இல்லை என்பதால் 2019 – 2020 ம் ஆண்டு பணி மூப்புப்பட்டியலில் இவரது பெயரை சேர்த்து வெளியிட தகுதியானவராக உள்ளார்.

இதன் அடிப்படையில் 2019–2020ம் ஆண்டிற்கு இரண்டு பணியாளர்கள் அடங்கிய பணிமூப்பு பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் ஆட்சேபனை மற்றும் அபிப்ராயம் ஏதும் இருப்பின் அதனை 07 தினங்களுக்குள் ஆணையர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. இது குறித்து எவ்வித ஆட்சேபணையும் பெறப்படவில்லை.

இந்நிலையில், திரு.இரா.சதீஸ்குமார், உதவி வருவாய் அலுவலர், என்பவர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையினை எதிர்த்து உரிய பரிகாரம் வேண்டி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் ரிட் மனு எண்.8299/2017ன் வாயிலாக வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கின் மீது இறுதி தீர்ப்புரை ஏதும் பிறப்பிக்கப்படாமல் வழக்கு நிலுவையில் இருந்து வருகின்றது.

இதனைத் தொடர்ந்து, திரு.என்.இராசமாணிக்கம், உதவி வருவாய் அலுவலரால் தனக்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட தண்டனை ந.க.எண். **11958/2016/சி3(மையம்)** நாள்.**02.03.2017** உத்தரவினை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(M.D) No.2530/2018 வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் காலியாக உள்ள நிர்வாக அலுவலர்/ கணக்கு அலுவலர் பணியிடத்தினை பூர்த்தி செய்வது தொடர்பாக **27.12.2017** அன்று வெளியிடப்பட்ட பணித் தேர்ச்சிப் பட்டியல் செயல்முறை ந.க.எண்.**6874/2014/சி1 (மையம்)**ல் தனது பெயர் விடுபட்டுள்ளது என்றும், இதனால் தனக்கு பணிபாதிப்பு ஏற்பட்டுள்ளது எனக் கருதி பணியாளரால் மற்றொரு வழக்கு எண். W.P.(M.D) No.1167/2018 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பணியாளர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள மேற்கண்ட வழக்குகளின் இறுதித் தீர்ப்புரைக்கு உட்பட்டும்,

மேலும், திருவாளர்கள் ச.நா.சண்முகம், எம்.எஸ்.மும்தாஜ், எஸ்.ரெங்கநாதன் ஆகிய மூவரை நிர்வாக அலுவலராகவும், திரு.சி.சிராஜிதீன், என்பவரை கணக்கு அலுவலராக தற்காலிகமாக பதவி உயர்வு செய்து பணியமர்த்தப்பட்டமைக்குரிய அரசின் உறுதியாக்க ஆணை வழங்கக் கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ்லுவலக கருத்துரு கடிதம் ந.க.எண். **6871 /2014 சி1 (மையம்)** நாள்.**10.01.2018** மற்றும்,

இதனை தொடர்ந்து திரு. என். ராஜமாணிக்கம், உதவி வருவாய் அலுவலர் மற்றும் திரு.ஆர்.ரமேஷ்குமார், கண்காணிப்பாளர் ஆகிய இருவரை நிர்வாக அலுவலர்களாக தற்காலிகமாக பதவி உயர்வு செய்து பணியமர்த்தப்பட்டமைக்குரிய அரசின் உறுதியாக்க ஆணை வழங்கக் கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ்வலுவலக கருத்துருக் கடிதம் ந.க.எண். **2002 /2018/ சி1 (மையம்)** நாள். **07.09.2019**

மேற்கண்ட இரு கருத்துருக்கள் மீது அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைக்குட்பட்டும்,

திரு.ஆர்.சதீஸ்குமார், உதவி வருவாய் அலுவலர் மற்றும் திருமதி.சி.மீனாட்சி, கண்காணிப்பாளர் ஆகிய இருவரும் **22.07.2019**ந் தேதிய விண்ணப்பத்தின் வாயிலாக பெறப்பட்ட உறுதி மொழிக் கடிதங்களின் படியும், மேற்கண்ட பணித் தேர்ச்சிப் பெயர் பட்டியல் தொடர்பாக அபிப்ராயம் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படாத நிலையில் பணி மூப்பு பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் மீது நாளது தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்பது மட்டும் இன்றி **01.04.2019–ஐ** தகுதி தேதியாக கொண்டு நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் நிலையிலானப் பணியிடங்களுக்கு என வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளை முழுமையாக பெற்றுள்ளதால் நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடங்களில் பதவி உயர்வு செய்திட கீழ்க்கண்ட பணியாளர்கள் தகுதி பெற்றுள்ளவர்களாக உள்ளனர்.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | தற்போது பதவி உயர்வு செய்யப்படும் பதவியின் விவரம் |
|---|---|---|
| 01 | திரு. இரா. சதீஸ்குமார், உதவி வருவாய் அலுவலர், | நிர்வாக அலுவலர் |
| 02 | திருமதி.சி.மீனாட்சி, கண்காணிப்பாளர், | கணக்கு அலுவலர் |

எனவே, சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளின் மீது பிறப்பிக்கப்பட உள்ள இறுதி தீர்ப்புரைக்கு உட்பட்டும், மற்றும் ஏற்கனவே நிர்வாக அலுவலர்/ கணக்கு அலுவலர் பதவி உயர்வு செய்யப்பட்டமைக்கான அரசின் பின்னேற்பு ஆணை கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ள கருத்துருக்களின் மீது பிறப்பிக்கப்படும் இறுதி ஆணைக்குட்பட்டும், மேற்கண்ட பணியாளர்களை நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர்களாக பதவி உயர்வு செய்து

கொள்ளவும், இதற்கான அரசின் உறுதியாக்க ஆணையினை பெற உரிய கருத்துருக்கள் அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அனுப்பி வைக்கவும் தனிஅலுவலரின் மன்ற பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

இம்மாநகராட்சியின் பல்வேறு நிலையிலான பணிகளை தொய்வின்றி மேற்கொள்வதற்கு நிர்வாக அலுவலர்/கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால் பொருளில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களை நிர்வாக அலுவலர் /கணக்கு அலுவலர்களாக தனி அலுவலரின் மன்ற ஒப்புதலுடன் பதவி உயர்வு செய்திடவும், இதற்கான உறுதி ஆக்க ஆணையினை பெற ஏதுவாக உரிய கருத்துருவினை அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அனுப்பி வைத்திடவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**சி1(மையம்)/2002/2018**

**தீர்மானம் எண்.368 (பொருள்– 1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட நான்கு கோட்டங்களில் உருவாகும் 450 டன் எடையுள்ள திடக்கழிவுகளை அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டு குவித்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குவித்து வைக்கப்பட்டுள்ள திடக்கழிவுகளை தரம் பிரித்து உரம் மற்றும் இதர பொருட்களாக மாற்றும் பணியினை வடிமைத்து, உருவாக்கி முதலீடு செய்து பராமரித்து ஒப்படைக்கும் பணி அடிப்படையில் (DBFOT) மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, M/s.Neway Engineers pvt Ltd, Chennai நிறுவனத்தாரை குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனமாக தேர்வு செய்து, தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.182, நாள்30.06.2017-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட நிறுவனத்தாருக்கு Letter of Acceptance வழங்கப்பட்டு Performance security சமர்பிக்க கோரி கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் நிறுவனத்தாரிடமிருந்து எவ்வித பதிலும் பெறப்படவில்லை. மேலும், 06.09.2017 மற்றும் 23.06.2017 ஆகிய தேதிகளில் நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டும், நிறுவனத்தாரிடமிருந்து எவ்வித பதிலும் பெறப்படவில்லை.

மேலும், Proceedings of the chief Engineer, Office of the commissioner of Municipal Administration, Chennai-5. Roc.No.18281/2017/DO2, Dt:05.10.2018-ன் படி சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தின் கீழ் Bio mining திட்டம் செயல்படுத்த தெரிவித்ததன் அடிப்படையில், அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டு குவித்து வைக்கப்பட்டுள்ள திடக்கழிவுகளுக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, வேறு ஒரு கோப்பு எண். இ2/5785/18(மையம்)-ல் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s.Zigma Global Environment Solution pvt ltd. Erode, நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, Bio Mining திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:32/2017-18 -ஐ ரத்து செய்யவும், மேலும் இப்பணிக்காக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள 2வது நிறுவனத்தின் பிணை வைப்புத்தொகை மட்டும் திரும்ப வழங்கவும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:32/2017-18-ஐ ரத்து செய்ய அனுமதி அளிக்கலாம்.
2. இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:32/2017-18-ன் வாயிலாக 2வது ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பிணை வைப்புத்தொகை மட்டும் திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ5/3875/2017(மையம்)**

**தீர்மானம் எண்.369 (பொருள்– 2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்.19 ல் அரசு சையது முர்துஸா மேல்நிலைப்பள்ளியில் 914 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். மாணவ, மாணவியர்கள் பயன்படுத்தும் கழிவறை மற்றும் ஆசிரியர் அலுவலர்கள் பயன்படுத்தும் கழிவறை ஆகியவற்றின் கழிவுகள் கழிவுநீர்த்தொட்டியில் சேகரிக்கப்பட்டு துர்நாற்றமும் சுகாதார கேடுகள் ஏற்படுவதால் இதனை தவிர்க்கும் பொருட்டு புதிய புதைவடிகால் இணைப்பு கோரி பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் 04.03.2019 அன்று கடிதம் கொடுத்துள்ளனர்

அரசு சையது முர்துஸா மேல்நிலைப்பள்ளி முற்றிலும் அரசு பள்ளி என்பதால் இப்பள்ளிக்கு சொத்துவரியிலிருந்து மாநகராட்சி சட்டம் பிரிவு 126 பொது விலக்களிக்கப்பட்ட இனங்கள் என்பதால் வரிவிதிப்பு நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே இப்பள்ளிக்கு அனைத்து கட்டணங்கள் மற்றும் வைப்பு தொகை முழுமையாக வசூலிக்கப்பட்டு புதிய புதைவடிகால் இணைப்பு வழங்குவதற்கு ஆணையர் அவர்களின் மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு.**

அனுமதி அளிக்கலாம்.

**இ1/1904/2019(மையம்)**

**தீர்மானம் எண்.370 (பொருள்– 3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்.27ல் செந்தண்ணீர்புரம் தெருவில் உள்ள மதினா மஸ்ஜித் & மதரஸா வக்ப்ப் (சுன்னத் வல் ஜமாஅத்) பள்ளிவாசலுக்கு புதிய குடிநீர் இணைப்பு மற்றும் புதைவடிகால் இணைப்பு வழங்கக்கோரி ஆணையர் அவர்களிடம் கடிதம் கொடுத்துள்ளனர்.

மேற்படி பள்ளிவாசல் இடம் ஆய்வு செய்யப்பட்டதில் கண்ணகி தெருவில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர் மாசடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என கண்டறியப்பட்டது. பள்ளிவாசலில் உள்ள ஆழ்துளை கிணறும், நிலத்தடி நீர் மாசு ஏற்பட்டுள்ளதால் உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. பள்ளிவாசல் என்பதால் சொத்து வரி விதிக்கப்படவில்லை எனவே திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 126ன் கீழ் பொது விலக்களிக்கப்பட்ட இனங்களாகும். (பொது மக்கள் மற்ற எவ்வித நோக்கத்திற்குமின்றி பொது வழிபாடு செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் பொது இடங்கள்) ஆகவே மேற்படி பள்ளிவாசலுக்கு புதிய குடிநீர் இணைப்பு மற்றும் புதைவடிகால் இணைப்பு வழங்கிட தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

அனுமதி அளிக்கலாம்.

**இ1/3703/2019(மையம்)**

**தீர்மானம் எண்.371 (பொருள்– 4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டத்தை சார்ந்த வார்டு எண் 65–ல் முன்னால் பேரூராட்சிக்குட்பட்ட புல எண் 138–ல் செங்குளத்தில் அமைந்துள்ள மீன் பாசி குத்தகை வசூல் செய்யும் உரிமத்திற்கு 23.07.2019 அன்று பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் (2019-2022) கலந்து கொண்டவர்கள் விபரம் மற்றும் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை கீழ்கண்டவாறு உள்ளது.

## பட்டியல் – 1

| இனம் எண் | குத்தகை இனத்தின் பெயர் | பொறுப்புத் தொகை மற்றும் வங்கி வரைவோலை விபரம் | கடந்த மூன்றாண்டு சராசரித் தொகை (ரூபாய்) | பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரப்பட்ட விவரம் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | பொன்மலைக் கோட்டத்தை சார்ந்த வார்டு எண் 65–ல் முன்னாள் பேருராட்சிக் குட்பட்ட புல எண் 138–ல் செங்குளத்தில் அமைந்துள்ள மீன் பாசி குத்தகை வசூல் செய்யும் உரிமம் | பொறுப்பு தொகை ரூ.25,000/– | 2016–2017–87,650/– 2017–2018–92,033/– 2018–2019–96,635/– சராசரி தொகை – 92,106/– | ஒருவரும் கலந்து கொள்ள வில்லை. | (1). திரு. எம். எஸ். இளங்கோவன், த/பெ எம். சுப்ரமணியன், 180, கக்கன் காலனி, திருவெறும்பூர், திருச்சி–13% | 1,06,000/– DD No. 459667 Dt. 18.07.2019 IOB | இந்த இனத்திற்கு பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் திரு.எம்.எஸ். இளங் கோவன் த/பெ எம். சுப்ரமணியன், அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மற்ற இரண்டு நபர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை விட கூடுதலாக உள்ளதாலும் மூன்றாண்டு சராசரி தொகையை விட ரூ.13894/- கூடுதலாக உள்ளதாலும் மற்றும் சென்ற ஆண்டு தொகையை விட ரூ.9365/- கூடுதலாக உள்ளதாலும் திரு.எம்.எஸ். இளங்கோவன் அவர்களுக்கு 01.08.2019 முதல் விகிதாசாரப்படி ஒப்படைக்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது / தனி கட்டுப்பாடுகளுக்குட்பட்டு அனுமதிக்கு சமர்ப்பிக்கப் படுகிறது. |
| | | | | | (2).திரு.எஸ். கருணாநிதி, த/பெ எம். சுப்ரமணியன், 180, கக்கன் காலனி, திருவெறும்பூர், திருச்சி –13. | 1,03,000/- DD No. 459665 Dt. 18.07.2019 IOB | |
| | | | | | (3). திரு.பி.மோகன், த/பெ கே.பக்கிரி, 42,காந்தி நகர் 2வது தெரு, திருவெறும்பூர், திருச்சி –13. | 1,02,000/- DD No. 776792 Dt. 18.07.2019 Indian Bank | |

## பட்டியல் – II

1. பொன்மலைக் கோட்டத்தை சார்ந்த வார்டு எண் 65–ல் முன்னாள் பேருராட்சிக்குட்பட்ட புல எண் 138–ல் செங்குளத்தில் அமைந்துள்ள மீன் பாசி குத்தகை வசூல் செய்யும் உரிமம்

   **2019–2020க்கான குத்தகை தொகை – ரூ.1,06,000/–**

   **2020–2021க்கு 5% உயர்வு (5300/–) – ரூ1,11,300/–**

   **2021–2022க்கு 5% உயர்வு (5565/–) – ரூ.1,16,865/–**

**அலுவலக குறிப்பு:**

1. பட்டியலில் கண்டுள்ளப்படி இனம் எண்.(7)ல் திரு.எம்.எஸ். இளங்கோவன் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,06,000/- அளித்துள்ளதால் அவருக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி அளிக்கலாம்.

மேலும் அரசாணை (நிலை) எண்.78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(மாநஉ) நாள்.25.05.2009ன்படி, மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்குவிட மாமன்ற தீர்மான

எண்.466, நாள். 31.12.2018ன்படியும் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டுப்பாடுகள்/ சிறப்பு கட்டுப்பாடுகள் / தனிக்கட்டுப்பாட்டில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பட்டியல் (2)ல் கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு இரண்டாம் ஆண்டிற்கு முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்தும் மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து வசூலிக்கவும் அனுமதி அளிக்கலாம்.

**(கோப்பு எண்.அ1/6418/2012/பொன்)**

**தீர்மானம் எண்.372 (பொருள்– 5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் இல்லங்களில் உருவாகும் மக்கும் குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பணியினை Home Compost முறை மூலம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களில் முதற்கட்டமாக சுமார் 10000 எண்ணிக்கை பொதுமக்களை ஊக்குவிக்கும் விதமாகவும் அவர்கள் தயார் செய்யும் இயற்கை உரத்தினை அவர்களே பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும் தங்கள் இல்லங்களில் மாடித்தோட்டம் அமைக்க தேவையான விதைகள் மற்றும் பொருட்களை வழங்கி அவர்களை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள இது தொடர்பான உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகையாக ரூ.35,00,000/– ஆக கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை ரூ.35,00,000/–ம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை இம்மாநகராட்சி 2019–2020ம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்.எச்1/7098/2019/மையம்)**

**தீர்மானம் எண்.373 (பொருள்– 6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.4, 5 மற்றும் 6க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுக்கழிப்பிடங்களை மராமத்து பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு. G. விஜயகுமார் திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு. G. விஜயகுமார் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.25379/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்புத் தொகை (2019–20) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | வார்டு எண்.4,5 மற்றும் 06க்குட்பட்ட கன்னிமார் தோப்பு, வடக்கு 5ம பிரகாரம், கீதாபுரம் கல்மேட்டுத் தெரு, திருவாணைக்கோவில் தெப்பகுளம் மறறம் தாகூர் தெரு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பிடங்களில் மராமத்து பணி மதிப்பீடு ரூ. 6.25 இலட்சம் இ7/ 7967 /2013 (மையம்) | திரு. G. விஜயகுமார் | முதல் பகுதி பட்டியல் தொகை | 29.10.14 காப்புத் தொகை | 18847.00 | பகுதி - VII பக்கம் எண்- 33 வ.எண் - 449 (மையஅலுவலகம்) |
| | | | 2ம் பகுதி பட்டியல் தொகை | 22.03.16 காப்புத் தொகை | 6532.00 | பகுதி - VIII பக்கம் எண்- 71 வ.எண் - 82 (மையஅலுவலகம்) |
| **மொத்தம்** | | | | | **25379.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் "எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை'' எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர்களான திரு. G. விஜயகுமார் ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.25,379 /–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/7967/2013(மையம்)**

**தீர்மானம் எண்.374 (பொருள்– 7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண். 10க்குட்பட்ட சத்திரம் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பெண்களுக்கான கழிவறை கட்டிடத்தில் அமைந்துள்ள ATM மையம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு, இம்மையத்திற்கு மாத வாடகை அடிப்படையில் அதிக அளவு வாடகை அளிக்கும் வங்கிகளினை தேர்வு செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயினை கொண்டு பராமரிப்பு செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, உரிய முகவர்களை தேர்வு செய்து, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டவும், நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/5923/2019(மையம்)**

**தீர்மானம் எண்.375 (பொருள்– 8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.10க்குட்பட்ட சத்திரம் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பெண்களுக்கான கழிவறை கட்டிடத்தில் பெண்களுக்கான மருத்துவமையம் அமைக்க இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ள ஏதுவாக உரிய வசதிகள் செய்து தரவும், அதிக அளவு வாடகை அளிக்கும் தனியார் மருத்துவனைகளை தேர்வு செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயினை கொண்டு பராமரிப்பு செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் **1998** மற்றும் விதிகள் **2000**ன் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, உரிய முகவர்களை தேர்வு செய்து, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டவும், நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>.**

ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/5922/2019(மையம்)**

**தீர்மானம் எண்.376 (பொருள்– 9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளை திரு.வி.ஆர்.விஸ்வநாதன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப் படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | வழங்க வேண்டிய தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | |
| | | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | வார்டு எண் 48க்குட்பட்ட கண்டித் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ.5.20 லட்சம்** இ3/10995/14 | திரு.வி.ஆர். விஸ்வநாதன் திருச்சி | 1145130037 16.12.14 (EMD) Ch Goc<br>07.04.15 (SD) 4 % | 5000.00<br>19211.00 | 5000.00<br>14408.00 | VIII | 1 | 13 |
| | | திரு.எஸ்.ராஜ் குமார் | 1145130036 16.12.14 (EMD) Goc | 5000.00 | 5000.00 | | | |
| 2 | வார்டு எண் 40க்குட்பட்ட எ.புதூர் முத்து மாரியம்மன் கோவில் தெருவில் அங்கன் வாடி மையம் கட்டும் பணி **மதிப்பீடு ரூ.5.10 லட்சம்** இ3/2884/14 | திரு.வி.ஆர். விஸ்வநாதன் திருச்சி | 1135131274 07.01.14 Goc (EMD)Ch<br>2135136770 25.02.14 Goc (EMD) Ch<br>15.04.15 (SD) 4 % | 5100.00<br>5100.00<br>20290.00 | 5100.00<br>5100.00<br>15217.00 | VIII | 3 | 34 |
| | | திரு.எஸ். ராஜ் குமார் | 1135131272 07.01.14 (EMD) Goc | 5000.00 | 5000.00 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வி.ஆர்.<br>விஸ்வநாதன் | | EMD<br>SD | **15200.00**<br>**39501.00**<br>**54701.00** | **15200.00**<br>**29625.00**<br>**44825.00** | | | |
| | வி.ராஜ்குமார் | | EMD (Zone) | **10000.00** | **10000.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிக்கு செலுத்தியுள்ள காப்புத் தொகை ரூ.**54,701/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு. வி. ஆர். விஸ்வநாதன், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்கவும், மேலும், அட்டவணையில் கண்டுள்ள பணியில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் திரு.எஸ். ராஜ்குமார், திருச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே, மேற்படியார் இப்பணிகளுக்கு வைப்பு தொகைகளுக்காக செலுத்திய தொகை ரூ.10,000/-த்தை ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ராஜ்குமார், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்கவும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு செலுத்தியுள்ள காப்புத் தொகை ரூ.**54,701/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.
